எனவே சாதாரண நாட்களில் 3.00 பி.பி.எம் எனவும் மழை மற்றும் நோய் தொற்று காலங்களில் 4.00 பி.பி.எம் எனவும் தற்போது 82 நாட்களுக்கு தேவையான 329230 லிட்டர் சோடியம் ஹைப்போ குளோரைட் திரவத்தை கொள்முதல் செய்திட, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தரப்படுத்தப்பட்ட விலை விவர அட்டவணையில் இதற்கான விலை விவரம் வழங்கப்படாத காரணத்தால் மதிப்பீடு தயார் செய்வதற்கு ஏதுவாக சோடியம் ஹைப்போ குளோரைட் திரவம் தயாரித்திடும் முன்னனி நிறுவனங்கள் மற்றும் விநியோகஸ்தர்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று உடனடியாக கொள்முதல் செய்திட மதிப்பீடு ரூ.49.98 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி கோரி மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. இப்பணிக்கான மதிப்பீடு தொகை ரூ .49.98 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. 2022–2023ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் குடிநீர் விநியோகம் – இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் (2305009) என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.1200.00 இலட்சத்திலிருந்து இப்பணிக்கான நிதியை ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ4/ 10547 / 2022(மையம்)**

**தீர்மானம் எண்: 210, பொருள்: 12 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 13**

இம்மாநகராட்சியின் பராமரிப்பின் கீழ் இயங்கி வரும் தலைமை நீரேற்று நிலையம், டர்பைன் நீரேற்று நிலையம், மற்றும் கலெக்டர் வெல் நீரேற்று நிலையம், அய்யாளம்மன் படித்துறை ஆகியவை காவிரி ஆற்றில் அமைக்கப்பட்டு அவைகள் மூலம் நாள் ஒன்றுக்கு சராசரியாக 30.00 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு உந்தப்படும குடிநீரை சுத்தம் செய்திட கிருமி நாசினியாக சோடியம் ஹைப்போ குளோரைடு திரவத்தை கொள்முதல் செய்திட தனி அலுவலர் தீர்மானம் எண்.548, நாள்.07.12.2020ல் நிர்வாக அனுமதியளித்துள்ளதன் பேரில் ஏற்கனவே குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய மெசர்ஸ். தமிழ்நாடு கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரீஸ், சென்னை நிறுவனத்தாரிடம் 01.04.2021 முதல் சோடியம் ஹைப்போ குளோரைடு திரவம் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில் கொள்முதல் செய்யப்பட்ட அளவுகள் சில தினங்களுக்கு மட்டுமே பயன்படுத்த இயலும்.

இந்நிலையில் தீவிர பருவமழை தொடங்கியுள்ளதால் குடிநீரால் ஏற்படும் தொற்று நோய்களான மஞ்சள் காமாலை, வயிற்றுப் போக்கு, டைபாயிட், கோவிட்–19 போன்றவற்றில் இருந்து பொதுமக்களை பாதுகாத்திட, குடிநீரை சுத்தம் செய்திட சோடியம் ஹைப்போ குளோரைட் திரவம் கையிருப்பில் வைத்திருப்பது அவசியமாகிறது. தற்போது புதிதாக கோப்புகள் தயாரிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ள நிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணி உத்தரவு வழங்கிட காலதாமதம் ஏற்படும் நிலையை கருத்தில் கொண்டும், உடனடியாக சோடியம் ஹைப்போ குளோரைட் திரவத்தை வாங்கி இருப்பில் வைத்து பொதுமக்களின் நலன் கருதி பயன்படுத்த வேண்டியுள்ளது.

எனவே ஏற்கனவே தனி அலுவலர் தீர்மானம் எண்.156, நாள்.25.02.2021ல் நிர்வாக அனுமதியளித்துள்ளதை தொடர்ந்து, பொதுமக்களின் நலன் கருதி குடிநீரை சுத்தம் செய்திட ஏதுவாக 3.28.000 லிட்டர் சோடியம் ஹைப்போ குளோரைட் திரவத்தினை மெசர்ஸ். தமிழ்நாடு கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்திடமே ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமாகிய லிட்டர் ஒன்றுக்கு ரூ.12.80 வீதம் தொடர்ந்து வாங்கி கொள்வதற்கு கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

தற்போது அனைத்து நீர்ப்பணி நிலையங்களுக்கும் ஒரு நாளைக்கு தேவைப்படும் சோடியம் ஹைப்போ குளோரைட் திரவம் – 8000 லிட்டர் கொள்முதல் செய்யப்பட வேண்டிய அளவு (41 தினங்கள்) –

| | | |
|---|---|---|
| 328000 லிட்டர் x 12.80 / லிட்டர் | – | ரூ.41,98,400.00 |
| GST (18%) | – | ரூ. 7,55,712.00 |
| மொத்தம் | – | ரூ. 49.54.112.00 |

ஆகவே, பொதுமக்களின் குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதியும், ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணி உத்தரவு வழங்கிட காலதாமதம் ஏற்படும் நிலையை கருத்தில் கொண்டு காலநீட்டிப்பு செய்து சோடியம் ஹைப்போ குளோரைடு திரவத்தை மெசர்ஸ்.தமிழ்நாடு கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்திடமே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதமாகிய லிட்டர் ஒன்றுக்கு ரூ.12.80 வீதம் கொள்முதல் செய்திட ஏற்படும் செலவினம் ரூ.49.54.112/– த்திற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. செலவின தொகை ரூ.49,54,112/–க்கு அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மெசர்ஸ்.தமிழ்நாடு கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரீஸ், சென்னை நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதை அனுமதிக்கலாம்.
3. 2022–23 ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் கணக்குத் தலைப்பு எண்.2305009ன் கீழ் குடிநீர் வழங்கும் பணிகள் பராமரிப்பு செலவினங்கள் தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.1200.00 இலட்சத்தில் இருந்து செலவு செய்துக் கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்தரவு வழங்கும் காலம் வரைக்கும் கால நீட்டிப்பு செய்து கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

**இ4/9116/2020(மையம்)**

**தீர்மானம் எண்: 211, பொருள்: 13 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**.

**பொருள்: 14**

மாவட்ட வருவாய் அலுவலர், திருச்சிராப்பள்ளி அவர்களின் 17.02.2021ம் தேதிய கடிதத்தில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டம், வார்டு AP, பிளாக் எண் 001, நகர புல எண் 1/9Aக்குட்பட்ட 41.47.27 ஹெக்டேர் பரப்பளவுள்ள இடத்தில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சார்பாக சூரிய மின் நிலையம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதால், அதற்குப் பதிலாக ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பஞ்சப்பூர் கிராமத்தில், தமிழ்நாடு சிறு தொழில் மற்றும் குறு தொழில் நிறுவனக் கூட்டமைப்பு அலுவலகம் கட்ட மாற்று நிலம் எடுத்துக் கொள்ள மாநகராட்சியின் இசைவினை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதனைத் தொடர்ந்து, 22.02.2021ம் தேதிய தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் ஒப்புதலுக்கிணங்க, தனி அலுவலர் மன்றத் தீர்மானம் எண் 111, நாள் 22.02.2021ன் அடிப்படையில், இவ்வலுவலகக் கடிதம், நாள் 25.02.2021–ன் வாயிலாக, மேற்படி மன்றத் தீர்மான நகல், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிலையில், மேற்படி தீர்மானத்தில், மேற்படி புலத்திற்குட்பட்ட 10 ஏக்கர் நிலத்தினில் தமிழ்நாடு சிறு தொழில் மற்றும் குறு தொழில் நிறுவனக் கூட்டமைப்பு அலுவலகம் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நிலையில், மேற்படி இடம், பொதுமக்கள் நலன் கருதி, ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளதால், மேற்படி தனி அலுவலர் மன்றத் தீர்மானத்தினை இரத்து செய்ய மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மேற்படி இடம், பொதுமக்கள் நலன் கருதி, ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளதால், தனி அலுவலர் மன்றத் தீர்மானம் எண் 111, நாள் 22.02.2021ஐ இரத்து செய்ய ஒப்புதல் வழங்கலாம்.

**(எப்1/1620/2021/மையம்)**

**தீர்மானம் எண்: 212, பொருள்: 14 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 15**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஸ்ரீரங்கம் கோட்டம் , வார்டு எண்.05, கதவு எண்.67 மற்றும் 68, ராயர் தோப்பு என்ற முகவரியில் இயங்கி வரும் கிஞ்சித்காரம் டிரஸ்ட் என்ற பெயரில் 086/005/05895 என்ற எண்ணில் காலிமனை வரி விதிக்கப்பட்டு அரையாண்டு காலிமனை வரித் தொகையாக ரூ.1310/– நிர்ணயம் செய்யப்பட்டு 2019–2020 முதல் மற்றும் இரண்டாம் அரையாண்டு வரை நிலுவையின்றி காலிமனை வரி செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி மனையில் புதிதாக கட்டிடம் கட்ட கட்டிட அனுமதி எண்37/2018, நாள்.09.04.2018 ல் அனுமதி பெறப்பட்டு தற்போது மேற்படி இடத்தில் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாக கிஞ்சித்காரம் டிரஸ்ட்டை 593/2004 என்ற எண்ணில் 20.05.2004 ல் பதிவு செய்யப்பட்டு , மேற்படி டிரஸ்ட் பெயரில் பல தொண்டுகள் செய்வதாகவும், அவற்றில் ஸ்ரீரங்கத்தில் 7 வயது முதல் 21 வயது வரை உள்ளவர்களுக்கு வேத பாடசாலையாக செயல்படுத்தப்பட்டு, அதில் தமிழ் திவ்யபிரபந்தமும் முக்கியமாக கற்றுக்கொடுக்கப்பட்டும் மற்றும் முக்கிய தொண்டாக வீ–எக்ஸெல் என்ற தொண்டு நிறுவனத்துடன் இணைந்து மாற்றுத்திறனாளிகளுக்கான சுய வேலைப்பயிற்சியை கடந்த மூன்று ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருவதாகவும், மேற்படி அனைத்தும் வாடகை கட்டிடத்தில் நடத்தப்பட்டு வருவதாகவும், தற்போது கதவு எண்.67 மற்றும் 68, ராயர் தோப்பு என்ற முகவரியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் மேற்கண்ட அனைத்து தொண்டுகளையும் செய்யப்போவதாகவும், சேவை செய்யவும், மேற்படி கட்டிடம் முழுக்க முழுக்க சேவை புரிய கட்டப்பட்டுள்ளதால் இதற்கு சொத்துவரி விதிப்பிலிருந்து வரி விலக்கு அளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

வருமான வரித்துறை சட்டத்தின் படி 80(G) வருமான வரித்துறை சட்டம் 1961(Central Act 43 of 1961) விலக்களிக்கப்பட்டுள்ளது.

மேலும், முத்திரைத்தாள் கட்டணம் செலுத்துவதிலும் Indian Stamp Act 1891 தான செட்டில்மெண்ட்க்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அரசாணை எண்.GO MS.No.224, நாள்.11.12.2013.

இந்த அறக்கட்டளையின் பதிவு அலுவலகம் முகவரியான நெ.6 பீம சேனா கார்டன் தெரு, மைலாப்பூர், சென்னை –600004 மைலாப்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்: 593/2004, நாள்.20.05.2004 பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றது.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டப்பிரிவு–126 ல் கீழ் கண்ட இனங்களுக்கு சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

(B) வாடகை வசூல் செய்யப்படாத தர்ம சத்திரங்கள் மற்றும் அவ்வாறு வாடகை வசூலிக்கப்படும் தொகையைத் தர்ம நோக்கங்களுக்கு முற்றிலும் பயன்படுத்தப்படும் வாடகை வாங்கும் சத்திரங்கள்.

(C) மன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட கல்வி நோக்கங்களுக்குப் பயன்படும் கட்டிடங்கள் மற்றும் மாணவர்கள் கல்வியின் பொருட்டு தங்கும் விடுதிகள் ஆதரவற்றோர், விலக்குகள் மற்றும் அனாதைச் சிறுவர்கள் தங்குவதற்கென்று தர்ம நோக்கங்களுக்காகக் கட்டிவிடப்பட்ட இடங்கள், காதுகேளாதவர் மற்றும் வாய்பேச முடியாதவர்களுக்கு கட்டப்பட்ட பள்ளிகள் மற்றும் கருணை இல்லங்கள் கணவரால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள் மற்றும் வயதான முதியவர்கள் தங்குவதற்குரிய ஆசிரமங்கள் மற்றும் இது போன்ற தர்ம நோக்குடன் கட்டப்பட்ட கட்டிடங்கள் ஆகியன.

மேலும், வருவாய் ஆய்வர் தனது குறிப்பில் மேற்படி கட்டிடம் முழுக்க முழுக்க பொது மக்களுக்கு சேவை செய்யும் இடமாக உள்ளதால் இதற்கு சொத்துவரி விதிப்பிலிருந்து வரிவிலக்கு அளிக்கலாம் என அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

எனவே, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டப்பிரிவு –126(B) மற்றும் (C) ல் சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்களிக்க வார்டு எண்–05, கதவு எண்.67 மற்றும் 68, ராயர் தோப்பு என்ற முகவரியில் கிஞ்சித்காரம் டிரஸ்ட் என்ற பெயரில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு மனுதாரர் விண்ணப்பத்தில் இணைக்கப்பட்டுள்ள டிரஸ்ட் பதிவு செய்யப்பட்டுள்ள பத்திரத்தின் நகல் மற்றும் கதவு எண்–67 மற்றும் 68 , ராயர் தோப்பு என்ற முகவரியில் உள்ள இடத்திற்க்கான ஆவணங்களின் அடிப்படையிலும், வருவாய் ஆய்வரின் நேரடி ஆய்வு அறிக்கையின் படியும் மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்ட பிரிவு –126(B) மற்றும் (C) ல் தெரிவிக்கப்பட்டுள்ள இனங்களுக்கு சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், மேற்படி முகவரியில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்களிப்பது தொடர்பாக மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்களிக்கலாம்.

**கோப்பு எண் அ3/4360 /2022 (ம 1)**

**தீர்மானம் எண்: 213, பொருள்: 15 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 16**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம்.1 (ஸ்ரீரங்கம்), புதிய வார்டு எண்.19, மேலரண்சாலை, மெயின்கார்டு கேட், மாநகராட்சி பொது கழிப்பிடம் அருகில் மாநகராட்சி இடத்தில் SBI, ATM வைப்பதற்கு கட்டிடம் கட்டப்பட்டது. ஆனால் மேற்படி கட்டிடத்தில் SBI, ATM இயங்கவில்லை. அதனை தொடர்ந்து மேற்படி கட்டிடத்தில் குடிநீர் சுத்தகரிப்பு மையம் ( RO Water), அமைக்கப்பட்டு செயல்பட்டு வந்த நிலையில், அரசு ஆணைப்படி குடிநீர் சுத்தகரிப்பு மையம் ( RO Water)க்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் குடிநீர் சுத்தகரிப்பு மையம் ( RO Water), முற்றிலுமாக அகற்றப்பட்டு மேற்படி கட்டிடம் எந்த ஒரு பயன்பாட்டில் இல்லாமல் பூட்டிய நிலையில் உள்ளது.

தற்போது மாநகராட்சியின் வருவாயை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மேற்படி மேலரண்சாலை, மெயின்கார்டு கேட் அருகில் உள்ள மாநகராட்சி கட்டிடக்கடையை மாத வாடகை அடிப்படையில் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்படைப்பு செய்வதற்கும், மேற்படி கடைக்கு மாத வாடகை சதுர அடிக்கு ரூ.66.41 வீதம் 112.98 சதுர அடிக்கு மாத வாடகை ரூ.7,503/- என நிர்ணயம் செய்யலாம் இளநிலை பொறியாளர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இளநிலை பொறியாளரின் குறிப்பின் படி புதிய வார்டு எண்.19, மேலரண்சாலை, மெயின்கார்டு கேட் அருகில் உள்ள மாநகராட்சி கட்டிடக்கடைக்கு மாத வாடகை தொகை ரூ.7503/- என நிர்ணயம் செய்தும், பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரி கடை ஒப்படைப்பு செய்வதற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

- புதிய வார்டு எண்.19, மேலரண்சாலை, மெயின்கார்டு கேட் அருகில் உள்ள மாநகராட்சி கட்டிடக்கடைக்கு மாத வாடகை தொகை ரூ.7503/- என நிர்ணயம் செய்து, பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரி கடை ஒப்படைப்பு செய்வதற்கு அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண்.அ1/003859/2022/ ம1**

**தீர்மானம் எண்: 214, பொருள்: 16 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 17**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி - மத்திய மண்டி- திடக்கழிவு மேலாண்மை பணியில் குப்பைகளை அகற்ற பயன்படுத்தப்பட்டு, தற்போது பயனற்ற நிலையில் உள்ள 8 க.மீ கொள்ளளவுள்ள குப்பைத்தொட்டிகள் 30 எண்கள் மற்றும் 1.1 க.மீ கொள்ளளவுள்ள குப்பைத்தொட்டிகள் 330 எண்களை 'உள்ளது உள்ளபடி' என்ற அடிப்படையில் ஒப்பந்தபுள்ளிகளுடன் கூடிய பொது ஏலத்தில் விட்டு பதிவேட்டில் இருந்து நீக்கம் செய்ய வேண்டி, உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளிகள் விபரம் கீழ்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

| வ. எண் | நிறுவனங்களின் பெயர் | 1.1.க.மீ குப்பைத்தொட்டிகள் | | | 8க.மீ குப்பைத்தொட்டிகள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஒன்றின் விலை புள்ளி தொகை (GST18% உள்பட) ரூ. | எண்ணிக்கை | மொத்த தொகை (GST18% உள்பட) ரூ. | ஒன்றின் விலை புள்ளி தொகை (GST18% உள்பட) ரூ. | எண்ணிக்கை | ஒன்றின் விலை புள்ளி தொகை (GST18% உள்பட) ரூ. |
| 1 | M/S.முஹம்மது அன் கோ. 3 எ, ஆழ்வார் தோப்பு தெரு, பாலக்கரை, திருச்சி . 8. | 2667.20 (80kgsx Rs,33.34) | 330 | 880176.00 | 28672.40 (860kgsx Rs 33.34) | 30 | 860172.00 |
| 2 | M/S.சி.என்.ஜி. டிரேடர்ஸ், 58,எம்.கே தெரு, பாலக்கரை , திருச்சி.8 | 2265.00 (80kgsx Rs,28.31) | 330 | 747450.00 | 24355.00 (860kgsx Rs 28.32) | 30 | 730650.00 |
| 3 | M/S.இந்துஸ்தான் ஸ்கிராப் டிரேடர், தஞ்சாவூர் ரோடு, திருச்சி-8 | 2135.00 (80kgsx Rs,26.69) | 330 | 704550.00 | 23340.00 (860kgsx Rs 27.14) | 30 | 700200.00 |
| 4 | M/S.பெஸ்ட் மோட்டார்ஸ், 5 ஜெயில் தெரு, மதுரை ரோடு, பாலக்கரை, திருச்சி-8. | 2000.00 (80kgsx Rs,25.00) | 330 | 660000.00 | 20700.00 (860kgsx Rs 24.07) | 30 | 621000.00 |
| 5 | M/S.ஜெயராஜ் & கோ, 247 சின்னசாமி நகர், தென்னூர், திருச்சி-17 | 1983.00 (80kgsx Rs,24.79) | 330 | 654390.00 | 21310.00 (860kgsx Rs 24.78) | 30 | 639300.00 |
| 6 | M/S.சேட் ஆட்டோ பார்ட்ஸ், 9 மதுரை ரோடு, பாலக்கரை, திருச்சி.8. | 1900.00 (80kgsx Rs,23.75) | 330 | 627000.00 | 20296.00 (860kgsx Rs 23.60) | 30 | 608880.00 |
| 7 | M/S.ஜாபர் டிரேடர்ஸ், 24/5, ஹூபர் ரோடு பீமநகர், திருச்சி-1. | 1794.00 (80kgsx Rs,22.43) | 330 | 592020.00 | 19281.00 (860kgsx Rs 22.42) | 30 | 578430.00 |

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள 7 நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் மெசர்ஸ் முஹம்மது அன் கோ, 3 எ, ஆழ்வார் தோப்பு தெரு, பாலக்கரை, திருச்சி.8. நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளி 1.1 க.மீ. கொள்ளளவுள்ள குப்பைத்தொட்டிகள் 330 எண்களுக்கு ரூ.880176/-ம் மற்றும் 8 க.மீ. கொள்ளளவுள்ள குப்பைத்தொட்டிகள் 30 எண்களுக்கு ரூ.860172/- ம் மற்ற நிறுவனங்களை காட்டிலும் அதிகமாக உள்ளது இவ்விலைப்புள்ளி தொகையை அடிப்படையாக வைத்து 'உள்ளது உள்ளபடி' என்ற அடிப்படையில் ஒப்பந்தபுள்ளிகளுடன் கூடிய பொது ஏலத்தில் விடுவதற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு:

திடக்கழிவு மேலாண்மை பணியில் குப்பைகளை அகற்ற பயன்படுத்தப்பட்டு, தற்போது பயனற்ற நிலையில் உள்ள 330 எண்ணிக்கை 1.1 க.மீ. கொள்ளளவுள்ள குப்பைத்தொட்டிகளை பெறப்பெற்ற அதிகப்பட்ச விலைபுள்ளி ரூ.8,80,176/-க்கும் மற்றும் 30 எண்ணிக்கை 8 க.மீ. கொள்ளளவுள்ள குப்பைத் தொட்டிகளை ரூ. 8,60,043/- க்கு குறையாமல் ஒப்பந்தபுள்ளியுடன் கூடிய பொது ஏலம் மூலம் விற்பனை செய்து மாநகராட்சி கணக்கில் வரவு வைக்க அனுமதி அளிக்கலாம்

**இ5/10094/2022(மை)**

**தீர்மானம் எண்: 215, பொருள்: 17 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள் : 18**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கட்டுப்பாட்டில் அமைந்துள்ள தலைமை நீர்ப்பணி நிலையம், டர்பைன் நீர்ப்பணி நிலையம், கலெக்டர் வெல் நீர்ப்பணி நிலையம்- பெரியார் நகர் மற்றும் கலெக்டர் வெல் நீர்ப்பணி நிலையம்- அய்யாளம்மன் படித்துறை ஆகியவை காவேரி ஆற்றில் அமைக்கப்பட்டு இயக்கத்தில் இருந்து வருகிறது.

மேற்கூறிய நீர்ப்பணி நிலையங்களில் நீண்ட நாட்களாக பயன்பாட்டில் இருந்து, தற்போது பழுதுற்று பயன்தீர்ந்த நிலையில் உள்ள மோட்டார்கள் மற்றும் பம்ப் செட்டுகள், ஸ்டார்ட்டர்கள், நீர்மூழ்கி மின்மோட்டார்கள், பைப் பொருட்கள், மின்சாதன பொருட்கள், தெருவிளக்கு சாமான்கள் மற்றும் அதன் தொடர்புடைய உபபொருட்கள் தலைமை நீர்ப்பணி நிலைய பண்டக சாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு பழுதற்ற நிலையில் உள்ள பொருட்கள் நீண்ட நாட்களாக பண்டக சாலையில் வைக்கப்பட்டுள்ளதால், துருப்பிடித்து அதன் தரம் மேலும் குறைவதுடன், புதிய பொருட்கள் வைக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது "சீர்மிகு நகரம்" திட்டத்தின் கீழ் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் நடைபெறும் வளாகத்தில் இப்பொருட்கள் வைக்கப்பட்டுள்ளதால் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வதற்கு, இப்பொருட்கள் இடையூறாக உள்ளது.

எனவே தலைமை நீர்ப்பணி நிலையம்-கம்பரசம்பேட்டை பண்டக சாலையில் **1996ம் ஆண்டு முதல் 2005** வரையுள்ள பழைய பயன்தீர்ந்த மின்மோட்டார்கள், பம்பு செட்டுகள், ஸ்டார்ட்டர்கள், பேனல் போர்டுகள், பைப் சாமான்கள் ஆகியவைகளை **"உள்ளது உள்ளபடி"** என்ற அடிப்படையில் பொது ஏலத்தில் விடுவதற்கு, இத்துறையில் அனுபவம் வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளிகள் பின்வருமாறு:-

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | மெசர்ஸ். ஸ்ரீ ராஜேஸ்வரி மெட்டல் மார்ட், உறையூர், திருச்சி-3 | ரூ. 8,32,390/- |
| 2. | மெசர்ஸ். அப்சல் டிரேடர்ஸ், பாலக்கரை, திருச்சி-1 | ரூ.7,85,435/- |
| 3. | மெசர்ஸ். கே.ஏ. டிம்பர்ஸ் டிரேடர்ஸ், தென்னூர், திருச்சி-17 | ரூ.7,40,360/- |
| 4. | மெசர்ஸ்.சுபானி ஸ்டீல் டிரேடர்ஸ், ஆரணி-1 | ரூ.6,98,040/- |
| 5. | மெசர்ஸ். பசல் ஸ்டீல்ஸ், பாலக்கரை, திருச்சி-8 | ரூ.6,79,370/- |
| 6. | மெசர்ஸ்.எஸ்.எம்.ஆன்டு சன்ஸ், தென்னூர், திருச்சி-17 | ரூ.6,59,650/- |
| 7. | மெசர்ஸ். ரே டிரேடர்ஸ், தென்னூர், திருச்சி-17 | ரூ.6,40,230/- |

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு பெறப்பட்ட விலைப்புள்ளிகளில், மெசர்ஸ்.ஸ்ரீ ராஜேஸ்வரி மெட்டல் மார்ட், உறையூர், திருச்சி நிறுவனம் வழங்கியுள்ள அதிகபட்ச விலையான ரூ.8,32,390/–ஐ அடிப்படையாக கொண்டு, பண்டக சாலையில் 1996ம் ஆண்டு முதல் 2005 வரையுள்ள பழைய பயன்தீர்ந்த மின்மோட்டார்கள், பம்பு செட்டுகள், ஸ்டார்ட்டர்கள், பேனல் போர்டுகள், பைப் சாமான்கள் ஆகியவைகளை "**உள்ளது உள்ளபடி**" என்ற அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய பொது ஏலத்தில் விடுவதற்கு அனுமதி கோரி மாமன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. அனுமதி அளிக்கலாம்.

**இ4 / 12263 / 2022 (மையம்)**

**தீர்மானம் எண்: 216, பொருள்: 18 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள் : 19**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கட்டுப்பாட்டில் அமைந்துள்ள தலைமை நீர்ப்பணி நிலையம், டர்பைன் நீர்ப்பணி நிலையம், கலெக்டர் வெல் நீர்ப்பணி நிலையம்– பெரியார் நகர் மற்றும் கலெக்டர் வெல் நீர்ப்பணி நிலையம்– அய்யாளம்மன் படித்துறை ஆகியவை காவேரி ஆற்றிலும், பொது தரைமட்ட நீர்சேகரிப்பு கிணறு, கலெக்டர் வெல் நீர்ப்பணி நிலையம் எண்.1,2, 3 மற்றும் கலெக்டர் வெல் நீர்ப்பணி நிலையம், ஆளவந்தான் படித்துறை ஆகியவை கொள்ளிடம் ஆற்றிலும் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோக பயன்பாட்டில் இருந்து வருகிறது.

மேற்கூறிய நீர்ப்பணி நிலையங்களில் நீண்ட நாட்களாக பயன்பாட்டில் இருந்து, தற்போது பழுதுற்று பயன்தீர்ந்த நிலையில் உள்ள மோட்டார்கள் மற்றும் பம்ப் செட்டுகள், ஸ்டார்ட்டர்கள், நீர்மூழ்கி மின்மோட்டார்கள், பைப் பொருட்கள், மின்சாதன பொருட்கள், தெருவிளக்கு சாமான்கள் மற்றும் அதன் தொடர்புடைய உபபொருட்கள் தலைமை நீர்ப்பணி நிலைய பண்டக சாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு பழுதற்ற நிலையில் உள்ள பொருட்கள் நீண்ட நாட்களாக பண்டக சாலையில் வைக்கப்பட்டுள்ளதால், துருப்பிடித்து அதன் தரம் மேலும் குறைவதுடன், புதிய பொருட்கள் வைக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது "சீர்மிகு நகரம்" திட்டத்தின் கீழ் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் நடைபெறும் வளாகத்தில் இப்பொருட்கள் வைக்கப்பட்டுள்ளதால் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வதற்கு, இப்பொருட்கள் இடையூறாக உள்ளது.

எனவே தலைமை நீர்ப்பணி நிலையம்–கம்பரசம்பேட்டை பண்டக சாலையில் **2005ம் ஆண்டு முதல் 2014** வரையுள்ள பழைய பயன்தீர்ந்த மின்மோட்டார்கள், பம்பு செட்டுகள், ஸ்டார்ட்டர்கள், பேனல் போர்டுகள், பைப் சாமான்கள் ஆகியவைகளை "**உள்ளது உள்ளபடி**" என்ற அடிப்படையில் பொது ஏலத்தில் விடுவதற்கு, இத்துறையில் அனுபவம் வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளிகள் பின்வருமாறு:–

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | மெசர்ஸ். அப்சல் டிரேடர்ஸ், பாலக்கரை, திருச்சி–1 | ரூ. 8,39,325/– |
| 2. | மெசர்ஸ். ஸ்ரீ ராஜேஸ்வரி மெட்டல் மார்ட், உறையூர், திருச்சி–3 | ரூ. 7,93,380/– |
| 3. | மெசர்ஸ். கே.ஏ. டிம்பர்ஸ் டிரேடர்ஸ், தென்னூர், திருச்சி–17 | ரூ. 7,63,140/– |
| 4. | மெசர்ஸ்.சுபானி ஸ்டீல் டிரேடர்ஸ், ஆரணி–1 | ரூ. 7,35,510/– |
| 5. | மெசர்ஸ். பசல் ஸ்டீல்ஸ், பாலக்கரை, திருச்சி–8 | ரூ. 7,11,260/– |
| 6. | மெசர்ஸ்.எஸ்.எம்.ஆன்டு சன்ஸ், தென்னூர், திருச்சி–17 | ரூ. 6,85,460/– |
| 7. | மெசர்ஸ். ரே டிரேடர்ஸ், தென்னூர், திருச்சி–17 | ரூ. 6,55,830/– |

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு பெறப்பட்ட விலைப்புள்ளிகளில், மெசர்ஸ். அப்சல் டிரேடர்ஸ், பாலக்கரை, திருச்சி–1 நிறுவனம் வழங்கியுள்ள அதிகபட்ச விலையான ரூ.8,39,325/–ஐ அடிப்படையாக கொண்டு, பண்டக சாலையில் 2005ம் ஆண்டு முதல் 2014 வரையுள்ள பழைய பயன்தீர்ந்த மின்மோட்டார்கள், பம்பு செட்டுகள், ஸ்டார்ட்டர்கள், பேனல் போர்டுகள், பைப் சாமான்கள் ஆகியவைகளை "**உள்ளது உள்ளபடி**" என்ற அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய பொது ஏலத்தில் விடுவதற்கு அனுமதி கோரி மாமன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. அனுமதி அளிக்கலாம்.

**இ4 / 12264 / 2022 (மையம்)**

**தீர்மானம் எண்: 217, பொருள்: 19 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 20**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கட்டுப்பாட்டில் அமைந்துள்ள தலைமை நீர்ப்பணி நிலையம், டர்பைன் நீர்ப்பணி நிலையம், கலெக்டர் வெல் நீர்ப்பணி நிலையம்– பெரியார் நகர் மற்றும் கலெக்டர் வெல் நீர்ப்பணி நிலையம்– அய்யாளம்மன் படித்துறை ஆகியவை காவேரி ஆற்றிலும், பொது தரைமட்ட நீர்சேகரிப்பு கிணறு, கலெக்டர் வெல் நீர்ப்பணி நிலையம் எண்.1,2, 3 மற்றும் கலெக்டர் வெல் நீர்ப்பணி நிலையம், ஆளவந்தான் படித்துறை ஆகியவை கொள்ளிடம் ஆற்றிலும் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோக பயன்பாட்டில் இருந்து வருகிறது.

மேற்கூறிய நீர்ப்பணி நிலையங்களில் நீண்ட நாட்களாக பயன்பாட்டில் இருந்து, தற்போது பழுதுற்று பயன்தீர்ந்த நிலையில் உள்ள மோட்டார்கள் மற்றும் பம்ப் செட்டுகள், ஸ்டார்ட்டர்கள், நீர்மூழ்கி மின்மோட்டார்கள், பைப் பொருட்கள், மின்சாதன பொருட்கள், தெருவிளக்கு சாமான்கள் மற்றும் அதன் தொடர்புடைய உபபொருட்கள் தலைமை நீர்ப்பணி நிலைய பண்டக சாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு பழுதற்ற நிலையில் உள்ள பொருட்கள் நீண்ட நாட்களாக பண்டக சாலையில் வைக்கப்பட்டுள்ளதால், துருப்பிடித்து அதன் தரம் மேலும் குறைவதுடன், புதிய பொருட்கள் வைக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது "சீர்மிகு நகரம்" திட்டத்தின் கீழ் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் நடைபெறும் வளாகத்தில் இப்பொருட்கள் வைக்கப்பட்டுள்ளதால் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வதற்கு, இப்பொருட்கள் இடையூறாக உள்ளது.

எனவே தலைமை நீர்ப்பணி நிலையம்–கம்பரசம்பேட்டை பண்டக சாலையில் **2014ம் ஆண்டு முதல் மார்ச் 2022** வரையுள்ள பழைய பயன்தீர்ந்த மின்மோட்டார்கள், பம்பு செட்டுகள், ஸ்டார்ட்டர்கள், பேனல் போர்டுகள், பைப் சாமான்கள் ஆகியவைகளை **"உள்ளது உள்ளபடி"** என்ற அடிப்படையில் பொது ஏலத்தில் விடுவதற்கு, இத்துறையில் அனுபவம் வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளிகள் பின்வருமாறு:–

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | மெசர்ஸ். அப்சல் டிரேடர்ஸ், பாலக்கரை, திருச்சி–1 | ரூ. 8,25,590/– |
| 2. | மெசர்ஸ். ஸ்ரீ ராஜேஸ்வரி மெட்டல் மார்ட், உறையூர், திருச்சி–3 | ரூ. 7,87,130/– |
| 3. | மெசர்ஸ். கே.ஏ. டிம்பர்ஸ் டிரேடர்ஸ், தென்னூர், திருச்சி–17 | ரூ. 7,36,880/– |
| 4. | மெசர்ஸ்.சுபானி ஸ்டீல் டிரேடர்ஸ், ஆரணி–1 | ரூ. 7,15,470/– |
| 5. | மெசர்ஸ். பசல் ஸ்டீல்ஸ், பாலக்கரை, திருச்சி–8 | ரூ. 6,82,960/– |
| 6. | மெசர்ஸ்.எஸ்.எம்.ஆன்டு சன்ஸ், தென்னூர், திருச்சி–17 | ரூ. 6,60,550/– |
| 7. | மெசர்ஸ். ரே டிரேடர்ஸ், தென்னூர், திருச்சி–17 | ரூ. 6,52,940/– |

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு பெறப்பட்ட விலைப்புள்ளிகளில், மெசர்ஸ். அப்சல் டிரேடர்ஸ், பாலக்கரை, திருச்சி–1 நிறுவனம் வழங்கியுள்ள அதிகபட்ச விலையான ரூ.8,25,590/–ஐ அடிப்படையாக கொண்டு, பண்டக சாலையில் 2014ம் ஆண்டு முதல் மார்ச் 2022 வரையுள்ள பழைய பயன்தீர்ந்த மின்மோட்டார்கள், பம்பு செட்டுகள், ஸ்டார்ட்டர்கள், பேனல் போர்டுகள், பைப் சாமான்கள் ஆகியவைகளை **"உள்ளது உள்ளபடி"** என்ற அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய பொது ஏலத்தில் விடுவதற்கு அனுமதி கோரி மாமன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. அனுமதி அளிக்கலாம்.

**இ4 / 12265 / 2022 (மையம்)**

**தீர்மானம் எண்: 218, பொருள்: 20 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

பொருள்: 21

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 1, வார்டு எண்.03க்குட்பட்ட காந்தி ரோட்டில் மாநகராட்சிக்கு சொந்தமான மனமகிழ் மன்ற ( ஸ்ரீரங்கம் கிளப் பில்டிங்) கட்டிடம் மற்றும் சித்த வைத்தியம் மருத்துவமனை கட்டிடம் மிகவும் பழமை வாய்ந்த கட்டிடமாகும் . இக்கட்டிடம் கட்டி சுமார் 115 வருடங்களுக்கு மேலாக உள்ளதால் மிகவும் பாழடைந்து பொதுமக்கள் பயனற்ற நிலையில் உள்ளது.

இந்நிலையில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர், மாண்புமிகு மேயர் அவர்களின் நேராய்வின் போது, பொதுமக்கள் பயன்பாடற்ற நிலையில் உள்ள மேற்குறிப்பிட்டுள்ள கட்டிடத்தை இடித்துவிட்டு பொதுமக்கள் பயன்பெறும் வகையில் புதிதாக பேருந்து நிலையம் அமைக்குமாறு தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, பொதுமக்களின் நலன் கருதி, மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படா வண்ணம் மேற்கண்ட பழுதடைந்துள்ள கட்டிடத்தின் மர ஜன்னல்கள், மரக்கதவுகள், இரும்பு கம்பிகள் ஆகியவைகளின் எடை அளவுகளை கொண்டு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு செய்யப்பட்டு தொகை ரூ.6,30,000/– க்கு நிர்ணயம் செய்யப்பட்டு, அதனடிப்படையில் பழுதடைந்துள்ள கட்டிடத்தினை உள்ளது உள்ளபடி என்ற அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி / ஏலம் கோரி முற்றிலுமாக இடித்து கட்டிட கழிவுகளை அப்புறப்படுத்தி கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பழுதடைந்துள்ள கட்டிடத்தினை முற்றிலுமாக இடித்து அப்புறப்படுத்த ஒப்பந்தப்புள்ளி / ஏலம் அறிவிப்பு கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ7/11960 /2022 (மையம்)**

**தீர்மானம் எண்: 219, பொருள்: 21 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 22**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் அவர்களின் ஒப்புதல் நாள்.28.07.2022ன் படி மண்டலம்–2 வார்டு எண்.22 இருதயபுரம் மருத்துவமனையில் பழைய கட்டுமானத்தை இடித்து விட்டு, 87ஆண்டுகள் பழமையான பொருட்கள் "உள்ளது உள்ளபடி" என்ற அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்பட்டு 18.08.2022ம் தேதி காலை 11.00 மணிக்கு ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய பொது ஏலம் நடைபெற்றது. ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை 3 ஒப்பந்தப்புள்ளி மட்டும் 18.08.2022 அன்று பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | உத்தேச மதிப்பு | ஒப்பந்தக்காரர் திரு.A.P.கனகராஜ் | ஒப்பந்தக்காரர் S.சுரேஷ் | ஒப்பந்தக்காரர் S.டேவிட் அந்தோணி |
|---|---|---|---|---|---|
| 1 | 1.Wooden Door Size (1.35x2.25m)<br>2.Wooden Door Partly Glazed Size (1.35x2.25m)<br>3.Wooden Door Size (1.05x2.10m)<br>4.Partly Glazed Door Size (1.05x1.85m)<br>5.Collapse Grill Door Size (1.85x2.40m)<br>6.Window Partly Glazed Size (1.20x1.80m)<br>7.Window Partly Glazed Size (1.45x1.80m)<br>8.Wooden Window Size (1.20x1.85m)<br>9.Scrap Channels Including Corrosioning<br>10.MS Window Size (1.20x0.90m)<br>11.MS Window Size (1.20x1.40m)<br>12.Cupboard Size (0.90x1.50m)<br>13.glazed window (2.40x2.40m) | **ரூ.1,75,000/–** | **ரூ.1,79000/–<br>18% GST<br>ரூ.32,220/–** | **ரூ.1,80,200/–<br>18% GST<br>ரூ.32,436/–** | **ரூ.1,76,000/–<br>18% GST<br>ரூ.31,680/–** |
| | **மொத்தம்** | **1,75,000/–** | **2,11,220/–** | **2,12,636/–** | **2,07,680/–** |

மேற்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சுரேஷ் ஒப்பந்தக்காரர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை கூடுதலாக உள்ளது. எனவே திரு.சுரேஷ் என்பவர் அளித்துள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை **ரூ.1,80,200/– GST–18% 32,436/–** ஆக மொத்தம் ரூ.**2,12,636**/–யை ஏற்கவும் மேற்படி தொகையை மண்டலம்–2 கருவூலத்தில் செலுத்திய பின்பு கட்டிடத்தை இடித்து பொருட்களை எடுத்து செல்ல மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கு மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதி அளிக்கலாம்.

இ1/02698/2022 (மண்டலம்–2)

***தீர்மானம் எண்: 220, பொருள்: 22 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.***

**பொருள் : 23**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 1, வார்டு எண்.03க்குட்பட்ட காந்தி ரோட்டில் மாநகராட்சிக்கு சொந்தமான மனமகிழ் மன்ற ( ஸ்ரீரங்கம் கிளப் பில்டிங்) கட்டிடம் மற்றும் சித்த வைத்தியம் மருத்துவமனை கட்டிடம் மிகவும் பழமை வாய்ந்த கட்டிடமாகும்.

இக்கட்டிடம் கட்டி சுமரர் 115 வருடங்களுக்கு மேலாகிவிட்டதால் மிகவும் பாழடைந்து பயனற்ற நிலையில் உள்ள இக்கட்டிடத்தை பொதுமக்களின் நலன் கருதி மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படா வண்ணம் இடித்து அப்புறப்படுத்தி, உள்ளதை உள்ளபடி என ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய ஏலத்தில் விடுவதற்கு மாமன்றம் தீர்மானம் நாள். .08.2022ந் தேதிய ஒப்புதலின்படி, அனைத்து கோட்டம் மற்றும் மைய அலுவலக விளம்பர பலகை விளம்பரம் செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய பொது ஏல அறிவிப்பு எண். 223–1 /2022–23ன் வாயிலாக 07.09.2022 அன்று முதன் முறையாக ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

இப்பணிக்கான, பொது ஏலத்தில் கீழ்க்கண்ட 5 நபர்களிடமிருந்து ஏலம் அறிவிப்பு , வார்டு குழு அலவலகம் 1 ல் ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் சமர்ப்பிக்கப்பட்டது . அதன் விபரம் பின்வருமாறு:–

| வ. எண் | இனங்களின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி விபரம் | ஏலதாரர்கள் கோரிய நபர்கள் விபரம் | வைப்பு தொகை செலுத்திய விபரம் | கோரும் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.03க்குட்பட்ட காந்தி ரோட்டில் மாநகராட்சிக்கு சொந்தமான மனமகிழ் மன்றம் ( ஸ்ரீரங்கம் கிளப் பில்டிங்) கட்டிடம் மற்றும் சித்த வைத்தியம் மருத்துவமனை இடித்து அப்புறப்படுத்தும் பணி மதிப்பீடு ரூ .6.30 இலட்சம் இ7/11960/2022 (மை) | ஒப்பந்ததாரர்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை | 1. **மெசர்ஸ். ஸ்ரீ பாலாயி பாப்பாயி டிரேடர்ஸ்,** 50, சின்ன செட்டி தெரு , உறையூர், திருச்சி | ரூ.12,600/– HDFC Bank. Trichy Ch No.000030 Dt.07/09/22 | ரூ434600 + GST செலான் எண். 086/S1/1/22–23–0005443, நாள்,07.09.2022 |
| | | | 2. **மெசர்ஸ். KA டிம்பர் டிரேடர்ஸ்,** எண்.44, மாரியம்மன் கோவில் தெரு , அண்ணா நகர், தென்னூர், திருச்சி | ரூ.12,600/– Kotak Bank, Trichy Ch. no.000005 Dt.07/09/22 | பணம் செலுத்தவில்லை |
| | | | 3. **மெசர்ஸ். அப்சல் டிரேடர்ஸ்,** எண்.3, GMS காம்பளக்ஸ், ஜெயில் தெரு , மதுரை ரோடு, பாலக்கரை, திருச்சி | ரூ.12,600/– ரொக்கம் | பணம் செலுத்தவில்லை |
| | | | **4,மெசர்ஸ். ஸ்ரீ ராஜேஸ்வரி மெட்டல் மார்ட்** , 51, தெலுங்கு செட்டி தெரு , உறையூர், திருச்சி – 03 | ரூ.12,600/– ரொக்கம் | பணம் செலுத்தவில்லை |
| | | | **5.மெசர்ஸ். K.R. டிரேடர்ஸ்,** 7, லூர்து சாமி பார்க் எதிர்புறம், E.B. ரோடு, பஜார், திருச்சி | ரூ.12,600/– ரொக்கம் | பணம் செலுத்தவில்லை |

மேற்கண்ட பணிக்கு , கலந்து கொண்ட ஐந்து (5) ஏலதாரர்கள் ஏலம் கோரியதில் , மதிப்பீட்டு விலையை விட மிகவும் குறைவாகவும் , மற்ற ஏலதாரர்களை விட கூடுதலான விலையில் ஏலம் கோரிய வரிசை எண் .1ல் குறிப்பிட்டுள்ள **மெசர்ஸ். ஸ்ரீ பாலாயி பாப்பாயி டிரேடர்ஸ், திருச்சி நிறுவனத்தின் ஏலம்** தொகை ரூ.434600 /+ GST 18 % (Rs.95400/-) ஆக மொத்தம் ரூ.530000/- பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கப்பட்டது.

எனவே, வரிசை எண்.1ல் கண்டுள்ள **மெசர்ஸ். ஸ்ரீ பாலாயி பாப்பாயி டிரேடர்ஸ் ,** திருச்சி ஒப்பந்ததாரர் கோரியுள்ள ரூ .4,34,600/- + சரக்கு & சேவை வரி (18%) ரூ.95400/- ஐ செலுத்தியுள்ளதை ஏற்கவும், மேற்கண்ட பழுதடைந்துள்ள கட்டிடத்தை முற்றிலுமாக இடித்து அகற்றிவிட்டு இடிபாடுகளை அப்புறப்படுத்தவும், சம்மந்தப்பட்ட இருப்பு / சொத்து பதிவேடுகளில் இருந்து நீக்கம் செய்யவும் அனுமதி கோரி மாமன்ற பொருள் தயார் செய்து ஒப்புதலுக் கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு-**

1. பணியின் அவசர அவசிய கருதி, பழுதான நிலையில் உள்ள ஸ்ரீரங்கம் கிளப் கட்டிடத்தை முற்றிலுமாக இடித்து அகற்றிவிட்டு **உள்ளது உள்ளபடி** என்ற அடிப்படையில் , இடிபாடுகளை உடன் அப்புறப்படுத்த வேண்டியுள்ளதால் , ஏலத்தில் கலந்து கொண்ட மற்ற ஏலதாரர்களை விட கூடுதலான விலை சமர்ப்பித்துள்ள **மெசர்ஸ். ஸ்ரீ பாலாயி பாப்பாயி டிரேடர்ஸ்,** திருச்சி நிறுவனத்தாரது ஒப்பந்த தொகை ரூ.434600/- + சரக்கு & சேவை வரி (18%) ரூ.95400/- ஆக மொத்தம் ரூ.530,000/-ஐ மாமன்றம் ஏற்கலாம்.
2. கட்டிடத்தை முற்றிலுமாக இடித்து அப்புறப்படு த்தப்பட்ட பிறகு சம்மந்தப்பட்ட இருப்பு / சொத்து பதிவேடுகளில் இருந்து நீக்கம் செய்ய மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
3. ஒப்பந்தப்புள்ளி கிடைக்கபெறாத ஒப்பந்ததாரர்களின் வைப்புதொகையை திரும்ப வழங்கவும் அனுமதி அளிக்கலாம்.

**இ7/ 11960 /2022 (மையம்)**

**தீர்மானம் எண்: 221, பொருள்: 23 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

**பொருள் : 24**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொதுநிதியின் கீழ் கண்ட ஒப்பந்த பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு இறுதி பட்டியல் வழங்கப்பட்டு, 3 ஆண்டுகள் கடந்துவிட்டது. எனவே, இப் பணிகளுக்கான பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள கூடுதல் வைப்புத் தொகைகளை திரும்ப வழங்குமாறு திரு. AG. இளமயிலன் ஒப்பந்ததாரர் திருச்சி அவர்கள் கோரியுள்ளார்.

திரு. AG. இளமயிலன் திருச்சி ஒப்பந்ததாரர் செலுத்திய முன் வைப்புத் தொகை ரூ. 71193/- இம்மாநகராட்சி நிலுவை வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதியப்பட்டுள்ளது.

மேற்படி, ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் ( Lapsed Deposit Account) பத்தி எண்.6ல் கண்டுள்ளவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | பிடித்தம் செய்யப்பட்டுள்ள நாள் | தொகை ரூபாயில் | காலங்கடந்த நிலுவை வைப்புத் தொகை (2021-22) பதிவேட்டின் பக்கம் எண் & வரிசை எண். |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | வார்டு எண்.57 மற்றும் 60க்குட்பட்ட பகுதிகளில் மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் உள்ள அதிக தீமை தரும் சீமை கருவேல மரங்களை முற்றிலும் அகற்றும் பணி மதிப்பீடு ரூ.2.00 இலட்சம் இ7/2148/2017 (மையம்) | திரு. AG. இளமயிலன் | 18.09.2017 (காப்புத் தொகை) | 7948. 00 | பகுதி – X பக்கம் எண்– 27 வ.எண் – 429 (மைய அலுவலகம்) |
| | | | EMD – 18,09,2017 | 4000.00 | பகுதி – X பக்கம் எண்–27 வ.எண் –430 (மைய அலுவலகம்) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | வார்டு எண்.51,52 மற்றும் 53 க்குட்பட்ட பகுதிகளில் மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் உள்ள அதிக தீமை தரும் சீமை கருவேல மரங்களை முற்றிலும் அகற்றும் பணி<br>மதிப்பீடு ரூ.9.90 இலட்சம்<br>இ7/2145 /2017 (மையம்) | திரு. AG. இளமயிலன் | 06.09.2017 (காப்புத் தொகை) | 39445. 00 | பகுதி –X<br>பக்கம் எண்–27<br>வ.எண் – 420<br>(மைய அலுவலகம்) |
| | | | EMD – 06.09.017 | 19800.00 | பகுதி – X<br>பக்கம் எண்–29<br>வ.எண் –421<br>(மைய அலுவலகம்) |
| | | | | **71193.00** | |

மேற்கண்டஅட்டவணையில் கண்டுள்ள பணிகளில் ஒப்பந்ததாரருக்கு தணிக்கையில் " எவ்வித தணிக்கைத் தடையும் இல்லை " எனச் சான்று அளிக்கப்பட்டுள்ளதால், பத்தி எண்.6ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பிடித்தம் செய்யப்பட்டு காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.71193/–யினை ஒப்பந்ததாரர் திரு. AG. இளமயிலன் அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**:

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகைகள் காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ளதால், தற்பொழுது காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து ( Lapsed Deposit Account) ஒப்பந்ததாரர் திரு. AG. இளமயிலன் திருச்சி அவர்களுக்கு ரூ. 71193/– திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**இ7/7164 /2022 (மையம்)**

**தீர்மானம் எண்: 222, பொருள்: 24 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 25**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் 4க்குட்பட்ட வார்டின் அனைத்து பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசரம் மற்றும் சிறப்பு பணிகள் மேற்கொள்ள ஆகஸ்ட் 2022 முதல் டிசம்பர் 2022 வரை பணியில் ஈடுபடுத்திக்கொள்ள உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது மண்டலம் 4ல் கீழ்காணும் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்

| வரிசை எண் | சிறப்பு தூய்மைப்பணியாளர்கள் பெயர்கள் |
|---|---|
| 1 | திரு. ராஜா / கோபால் |
| 2 | திரு. கீத்தின் கெர்சோன்/ ராபர்ட் கென்னடி |
| 3 | திரு. ஆனந்து / மாரிமுத்து |
| 4 | திரு. வீரபாண்டி /ஆறுமுகம் |
| 5 | திரு. தங்கவேலு / சாமிநாதன் |
| 6 | திரு. ஸ்டீபன் /ஆரோக்கியராஜ் |
| 7 | திரு.சுரேஷ்/துரைசாமி |
| 8 | திரு.மில்சன் /ஜேசுராஜ் |
| 9 | திரு.ரெக்ஸ் /டென்னிஸ்ராஜ் |
| 10 | திரு.லூதர் போர்ட் / லூஸ்வெல்ட் |
| 11 | திரு.செந்தில்குமார் /கணேசன் |

மேற்கண்ட பணியாளர்களை 01.08.2022 முதல் 31.12.2022 (2022–2023) மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள 11 எண்ணிக்கையிலான தற்காலிக தூய்மைப்பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தி கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

இவ்வாறு பணி அமர்த்துவதால் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம் கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியாளர்களின் எண்ணிக்கை | வேலை நாட்கள் | மொத்த மனித வேலை நாட்கள் | நாள் 1க்கு நபர் 1க்கு ஊதியம் ரூ. | ஊதியம் கலம் (4x5) | தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி 13ரூ (கலம் 6ஓ 13ரூ) நிர்வாக பங்கு தொகை ரூ. | ESI நிர்வாக பங்கு தொகை மொத்த ஊதியம் ரூ. | மொத்த ஊதியம் ரூ. (கலம் 6X3.25ரூ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | 11 | 153 | 1683 | 575 | 967725 | 125804 | 31451 | 1124980 |

மேற்கண்ட அட்டவணையில் கலம் எண் 9ல் கண்டுள்ளவாறு 01.08.2022 முதல் 31.12.2022 வரை 5 மாத காலத்திற்கு 11 எண்ணிக்கையில் தற்காலிக தூய்மைப்பணியாளர்களை ஈடுபடுத்த ஆகும் செலவின தொகை ரூ. 1124980– ஆக கணக்கிடப்பட்டுள்ளது

